பக்கங்கள்: 09

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 கார்த்திகை 18 செவ்வாய்க்கிழமை 03.12.2024 கதிர் 026

## இனிது ரகசியம் அல்ல!

மாற்றம் என்பதே மாறாத கொள்கை என்ற பெருங்குரலுடன் தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்தாலும், நடைமுறையில் அந்த மாற்றத்தை நிகழ்த்துவது ☞2

## பயங்கரவாதத் தடைச் சட்டம் வேண்டாம் அதே எதிர்ப்புச் சட்டமும் இனி வேண்டாம்

### நாடாளுமன்றைப் பயன்படுத்தி நீக்குங்கள் என்று மக்கள் போராட்ட முன்னணி வலியுறுத்து

நாடாளுமன்றத்தின் அதிகாரத்தைப் பயன்படுத்தி பயங்கரவாதத் தடைச் சட்டத்தை விரைவில் நீக்கவேண்டும். அதற்குப் பதிலாக பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தைக் கொண்டு வரக்கூடாது என்பது கொள்கையாக இருக்கவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது மக்கள் போராட்ட முன்னணியின் செயற்குழு.

மாவீரர் தினம் தொடர்பில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கிழ் 4 பேர் கைது செய்யப்பட்டமை குறித்து அது வெளியிட்டுள்ள அறிக்கையில் இதனைத் தெரிவித்துள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் நவம்பர் 30 மற்றும் டிசம்பர் 01 ஆகிய திகதிகளில் பொலிஸார் நான்கு பேரைக் கைது செய்துள்ளனர் என்று ☞2

## பிரபாகரன் பிறந்தநாள், புலிக்கொடி பற்றி பருத்தித்துறை நீதிமன்றில் 'பி' அறிக்கை

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தேசியத் தலைவர் பிரபாகரனின் பிறந்தநாள் கொண்டாட்டம், மாவீரர் தினம் மற்றும் புலிக்கொடி பறக்கவிடப்பட்டமை தொடர்பிலான 'பி' அறிக்கை வல்வெட்டித்துறை பொலிசாரால் நேற்று பருத்தித்துறை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகளின் தேசியத்தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் பிறந்த தினத்தன்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் தலைமையில் பலர் கூடீ கேக் வெட்டி கொண்டாடினர். அதேபோன்று மாவீரர் தினத்தன்று ☞2

## வேட்புமனுக்கள் தொடர்பில் இன்று கட்சித் தலைவர்கள் கூடி ஆராய்வு

உள்ளூராட்சிசபைத்தேர்தலுக்கான வேட்புமனுக்களைத் திரும்பவும் கோருவதா அல்லது ஏற்கனவே கோரப்பட்ட வேட்புமனுக்களின் அடிப்படையில் தேர்தலை நடத்துவதா என்பது தொடர்பில் இன்று நாடாளுமன்றக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் ஆராயப்படும் என்று சபை முதல்வர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றகட்டடத்தொகுதியில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்காக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள வேட்புமனுக்கள் குறித்தே விசேடமாக கலந்துரையாடப்படவுள்ளது.

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வேட்புமனுக்களைப் புதிதாகக் கோரவேண்டும் என்று கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டதாக யாழ். தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தெரிவித்ததாகச் செய்திகள் வெளியாகி இருந்த நிலையில், இன்றே அது பற்றி ஆராயப்படும் என்று சபை முதல்வர் அறிவித்துள்ளார்.

எனினும் உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட ☞8

## மாகாண சபைகள் நீக்கம் என்ற ரில்வினின் கருத்துக்கு விளக்கம் என்ன? அநுர, ஹரினியிடம் சுமந்திரன் கேள்வி

### இரு தரப்பு தகவல்களும் முரண்படுவதாகக் காட்டம்

மாகாண சபைகள் முறைமை நீக்கப்படும் என்று ஜேவிபியின் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்திருக்கும் கருத்துக்கு ஜனாதிபதி மற்றும் பிரதமரின் பதில் என்ன என்று காட்டத்துடன் கேள்வி எழுப்பியுள்ளார் தமிழ் அரசுக் கட்சியின் பேச்சாளரான முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன்.

மாகாண சபை முறைமை தொடரும் என்றும் மாகாண சபைகளைப் பலப்படுத்தும் வகையில் அமைந்த 2015 முதல் 2019 வரை முன்னெடுக்கப்பட்ட புதிய அரசமைப்பு முயற்சி தொடரும் என்றும் ஜனாதிபதியின் தேர்தல் அறிக்கை உறுதியளித்திருப்பதற்கு முற்றிலும் மாறாக அமைந்துள்ள ரில்வினின் கருத்தைத் தெளிவுபடுத்துங்கள் என்று சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

தனது எக்ஸ் தளப் பதிவில் அவர் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஹரினியை 'டாக்' செய்து இந்தப் பதிவை இட்டுள்ளார்.

"மாகாண சபைகள் ஒழிக்கப்படும் என்று ரில்வின் தெரிவித்திருக்கின்றார். மாகாண சபைகள் தொடரும் என்றும் அதனைப் பலப்படுத்தும் வகையிலமைந்த 2015 - 2019 அரசமைப்பு வரைவு முழுமைப்படுத்தப்படும் என்றும் ஜனாதிபதி வழங்கிய வாக்குறுதியோடு ரில்வினின் கருத்து முற்றிலும் முரண்ப ☞2

## கிணற்றில் தவறி வீழ்ந்து பூசகர் பரிதாபச் சாவு

கிணற்றில் குளித்துக்கொண்டிருந்தபோது தவறிவிழுந்த பூசகர் உயிரிழந்தார். சம்பவம் சுதுமலை தெற்கு, மானிப்பாய் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் அதே இடத்தை சேர்ந்த மகாலிங்கம் கருணாகரன் (வயது -52) என்பவரே உயிரிழந்தார்.

இணுவில் ஞானவைரவர் கோவில் பூசகரான இவர் இறப்புச் சடங்கு ஒன்றுக்கு சென்றுவிட்டுத் வீடு திரும்பி, கிணற்றில் அள்ளித் தோய்ந்து கொண்டிருந்தபோது தவறிக் கிணற்றில் விழுந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

சடலம் மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் நேற்று திங்கட்கிழமை யாழ். மாவட்ட திடீர் இறப்பு விசாரணை ☞2

## ரில்வினின் ஒருதலைப்பட்சமான கருத்துகள் ஏற்புடையதே அல்ல

### மனோ கணேசனும் சீற்றம்

மாகாண சபை முறைமையை நீக்குவோம் என்று ஜேவிபி செயலாளர் ரில்வின் சில்வா ஒருதலைப்பட்சமாகக் கூறியிருப்பது ஏற்புடையதல்ல என்று பதிலடி கொடுத்துள்ளார் ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன்.

இது தொடர்பில் நேற்று அவர் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

'மாகாணசபை என்பதை நாம் ஏற்க மாட்டோம். ஆனால், இன்றைய மாகாணசபை முறைமை என்பது தமிழ் மக்களின் போராட்டங்களால் கிடைக்கப்பெற்றது. ஆகவே அதை நாம் எதிர்க்கவும் போவதில்லை' என ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க, கடந்த தேர்தல்களுக்கு முன் என்னிடம் நேரடியாக கூறி உள்ளார். இன்னமும் பல தமிழ் ☞2



## 13ஐ முழுமையாக அமுல்படுத்தவேண்டும் புதிய அரசமைப்பூடாகத் தீர்வும் அவசியம்

### வலியுறுத்துகிறார் தமிழ் அரசுக் கட்சி செயலாளர்

ஜேவிபியின் செயலாளர் ரில்வின்சில்வாவின் கருத்துதான் ஆளும்தரப்பின் கருத்தாகவும் நிலைப்பாடாகவும் உள்ளதா என்பதனை ஆளும்தரப்பு வெளிப்படுத்தவேண்டும். அதேநேரம் அநுர ஆட்சி அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தவேண்டும். அதேபோல் தமிழர்களுக்கு நிரந்தர அரசியல் தீர்வை புதிய அரசமைப்பின் ஊடாக உறுதிப்படுத்தவேண்டும். அதற்கு அப்பால் அந்த உரிய தீர்வானது அனைத்து இன மக்களும் ஏற்றுக் ☞8

## சிறீதரன் - கஜேந்திரகுமார் சந்தித்து புதிய அரசமைப்பு குறித்துப் பேச்சு

### தீர்வை பொது வேலைத் திட்டத்தில் அணுக இணக்கம்

தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் யாழ். தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட சிறீதரனும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட கஜேந்திரகுமாரும் நேரில் சந்தித்து ஆளும் தரப்பின் புதிய அரசமைப்பு முயற்சிக்கான தயார்ப்படுத்தல் தொடர்பில் கலந்துரையாடி உள்ளனர். இந்தச் சந்திப்பில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் கஜேந்திரனும் உடனிருந்தார்.

இந்தச் சந்திப்பில், ஆளும்தரப்பின் புதிய அரசமைப்பு முயற்சியின்போது ☞8

## இலங்கை - இந்திய ஒப்பந்தம் ஒரு திணிப்பு 13 முறையற்ற விதத்தில் பிறந்த குழந்தை

### சட்டக் கல்லூரி அதிபர் கொந்தளிப்பு

இலங்கை - இந்திய ஒப்பந்தம் இலங்கை மீது திணிக்கப்பட்ட ஒன்று. அதன் வழி வந்த அரசமைப்பின் 13ஆவது திருத்தம் முறையற்ற விதத்தில் கொண்டுவரப்பட்டது. இங்கு நடைமுறைப்படுத்தப்படவேண்டிய சட்டங்கள் பிறிதொரு நாட்டினால் தீர்மானிக்கப்படுவது ஏற்புடையதல்ல என்று இலங்கை சட்டக் கல்லூரியின் அதிபர் ஜனாதிபதி சட்டத்தரணி பிரஷாந்த லால் டி அல்விஸ் தெரிவித்தார்.

சர்வதேச உறவுகள் மற்றும் சட்டம் - 2024 சர்வதேச ஆய்வு மாநாடு நேற்று கொழும்பிலுள்ள இலங்கை மன்றக்கல்லூரியில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு விசேட உரையாற்றுகையிலேயே ☞8

## ரில்வினின் கருத்தை சரியாக புரிந்துகொள்ளவது அவசியம்

### பிரதி அமைச்சர் அருண் விளக்கவுரை

மாகாண சபை முறைமையை நீக்குவதற்கான மக்கள் ஆணை தேசிய மக்கள் சக்தியால் பெறப்படவில்லை. மாகாண சபைகைளை நீக்கும் தீர்மானம் எதுவும் இதுவரையில் எடுக்கப்படவும் இல்லை. இருப்பினும் இப்போதைய மாகாண சபை அதிகாரங்கள் போதியதல்ல, அதனால் புதிய அரசமைப்பு ஊடாக மேலும் ☞8

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

எளிதல்ல என்பது புதிய ஆட்சியாளர்களுக்கு இப்போது புரியத் தொடங்கியிருக்கும். ஒரே குட்டையில் ஊறிய மட்டைகளான அதிகார வர்க்கமும் நிர்வாக வர்க்கமும் இருக்கும் வரைக்கும் பழையன கழிதலும் மாற்றம் உள்வருதலும் மிகச் சவாலானது. தேர்தல் மூலம் ஆட்சித் தலைமை மாறினாலும் நிறைவேற்று அதிகாரம் கை மாறினாலும் அரச நிர்வாகத்தை நடைமுறையில் மக்களிடம் கொண்டு சேர்ப்பவர்கள் அதிகாரிகளே. அவர்களை தூக்கிக் கடாசிவிட்டு புதியவர்களை தேசிய மக்கள் சக்தியால் நியமிக்க முடியாது. ஒரே குட்டையில் அதுவும் பழைய அரசியல்வாதிகளின் குட்டையில் ஊறிய அதிகாரிகள் மற்றும் நிர்வாக வர்க்கத்தினரால் மாற்றங்கள் அவ்வளவு இலகுவில் வந்துவிடாது. தேசிய மக்கள் சக்தியின் புதிய தலையிடி இதுதான்.

எதற்கு இத்தனை பீடிகை என்று நீங்கள் யோசிக்கிறீர்கள் என்பது புரிகின்றது. காரணம் இருக்கின்றது.

அண்மையில் பனை அபிவிருத்திச் சபைக்குத் தலைவரை நியமிப்பதில் ஆளும் தரப்பு ஒரு சர்ச்சையை எதிர்கொண்டது. தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பு மற்றும் ஜனாதிபதித் தேர்தல் தமிழ் வேட்பாளர் புகழ், செல்வின் இரேனியசை முதலில் நியமனம் செய்துவிட்டு அங்கிருந்த தொழிற்சங்கம் ஒன்று எதிர்ப்புத் தெரிவித்ததும், சபையின் முன்னாள் தலைவர் ஒருவரான சகாதேவனைத் தலைவராக நியமனம் செய்தனர். அவரது நியமனத்திற்கும் சிறிய எதிர்ப்புக்கள் முணுமுணுப்புக்கள் கிளம்பின என்றாலும் ஆளும்தரப்பு அதனைக் கண்டுகொள்ளவில்லை. அதனால் துளிர்விட்டுப் போனதாலோ என்னவோ வடக்கின் அரச நிர்வாகங்களில் அவரது தலையீடு இப்போதைக்கு அதிகரித்துள்ளது என்ற சீற்றம் அதிகாரிகளிடம் உண்டு. அமைச்சராக டகளஸ் இருந்தபோதும் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவராக அங்கஜன் இருந்தபோதும் இப்படித்தான் இருந்தது, இப்போதும் அதில் மாற்றமில்லை என்று அவர்கள் கொந்தளிக்கிறார்கள்.

அவர்களின் கொந்தளிப்பிலும் ஒரு நியாயம் இருக்கத்தான் செய்கிறது என்பதற்குச் சான்றாக ஒருசம்பவம் நடந்துமுடிந்திருக்கிறது. அது ஜனாதிபதியின் காதுகள் வரைக்கும் சென்று சேர்ந்திருக்கிறது என்பதுதான் அதில் புதிய விடயம். பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் அண்மைய நாட்களாகத் தான்தான் மீன்பிடித்துறை அமைச்சரின் ஒருங்கிணைப்பாளர், தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் முன்மொழியப்பட்ட பிரதிநிதி என்றெல்லாம் கூறிக்கொண்டு அரச நிர்வாக விடயங்களில் மூக்கை நுழைத்து வருகின்றார் என்று பாதிக்கப்பட்டவர்கள் கூறுகின்றார்கள். ஆனால், அவருக்கு அத்தகைய பதவிகள் எவையும் வழங்கப்பட்டதாக அதிகாரிகளுக்கு உத்தியோகபூர்வமான கடிதங்கள் எவையும் அனுப்பப்படவில்லை. அமைச்சராலே, நாடாளுமன்ற உறுப்பினர்களாலோகூட அவர்களுக்குத் தெரியப்படுத்தப்படவில்லை. இந்த நிலையில் அபிவிருத்திச் சபைத் தலைவரை மிதிப்பதா கடப்பதா என்று தெரியாது திணறுகிறார்கள் அதிகாரிகள்.

இந்தத் திரிசங்கு நிலையைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்ட அபிவிருத்திச் சபைத் தலைவர் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்திற்குள்ளும் தலையைவிட்டுச் சிலுப்பப்போக குடுமியைப் பிடித்து தூக்கி வீசிவிட்டார்கள் என்று கேள்வி. திணைக்களத்திற்குச் சொந்தமாகப் பருத்தித்துறையில் உள்ள களஞ்சியம் ஒன்றுக்குச் சனிக்கிழமை சென்ற அவர், களஞ்சியசாலைக்குப் பொறுப்பான அலுவலரை உடனடியாக அங்கு வரும்படி கூறியிருக்கிறார். அவரால் அப்போது உடனடியாக வரமுடியவில்லை. அத்தோடு களஞ்சியசாலையைத் திறக்க உயரதிகாரிகளின் அனுமதி வேண்டும் என்றும் கூறியிருக்கிறார். உடனே வந்து களஞ்சியசாலையைத் திறக்கிறாயா இல்லையா என்று கோபத்தின் உச்சிக்குச் சென்ற தலைவரே ருத்திர தாண்டவமாடியிருக்கிறார். அப்படியும் கோபம் தணியாமல், களஞ்சியசாலைக்கு போடப்பட்டிருந்த பூட்டுக்கு மேலதிகமாக மற்றொரு பூட்டைத்தானே வாங்கி மாட்டிவிட்டு அதன் திறப்புக்களையும் எடுத்துக்கொண்டு சென்றுவிட்டார்.

களஞ்சியப் பொறுப்பாளர் கடமைக்குத்திரும்ப வேண்டும் என்றால், தன்னிடம் வந்துதானே ஆகவேண்டும் என்ற நினைப்பில் அவர் அப்படிச் செய்திருப்பார் போலும். ஆனால் இதனை வசதியாக, தமக்குச் சாதமாகப் பயன்படுத்திக்கொண்ட திணைக்கள அதிகாரிகள், உடனடியாக மேலதிகப் பூட்டுடன் இருந்த களஞ்சியசாலையைப் படம் எடுத்து விலாவரியாக தமது திணைக்கள பணிப்பாளர் நாயகத்திடம் போட்டுக்கொடுத்து விட்டார்கள். அவரும் இப்படியே போனால் சரிவராதி என்று உடனடியாக ஜனாதிபதியின் காதில் ஆதாரங்களுடன் போட்டுவிட்டார்.

உடனடியாக ஜனாதிபதி செயலகத்திலிருந்து துறைசார் அமைச்சருக்கு நல்ல 'டோஸ்' விழுந்துள்ளது. அவர் எடுத்து எரிந்து விழுந்ததைத் தொடர்ந்-து தலைவர் அமைதியாகப் போய் பூட்டைக் கழற்றிக் கையோடு எடுத்து வந்திருக்கிறார். களஞ்சியப் பொறுப்பாளருக்கு அழைப்பெடுத்த அவர் திறப்பைத் தருகின்றேன் என்று கூறியிருக்கிறார். ஆனால் அவரே உசாராக நீங்கள் உங்கள் பூட்டையே எடுத்துச் சென்றுவிடுங்கள் என்று கழன்றுகொண்டார்.

இனியாவது தலைவர் திருந்துவாரா என்று காத்துக் கொண்டிருக்கிறார்கள் அதிகாரிகள். மாற்றம் நிகழுமா என்று நாங்களும் பார்த்துக்கொண்டி-ருக்கலாம்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## ரில்வினின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுகின்றது. அனுரகுமார திஸநாயக்க, ஹரினி, பிமல் ரத்நாயக்க ஆகியோர் இதனைத் தெளிவுபடுத்த முடியுமா" என்று அவர் அந்தப் பதிவில் தெரிவித்துள்ளார்.

கொழும்பிலிருந்து வெளியாகும் வீரகேசரி பத்திரிகைக்கு ரிவின் வழங்கிய நேர்காணல் ஒன்றில் மாகாண சபைகள் நீக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்ததையும் சுமந்திரன் தனது பதிவோடு இணைத்துள்ளார்.

இலங்கையில் நடைமுறையில் உள்ள அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தில் முன்மொழியப்பட்டுள்ள மாகாண சபை முறைமையை முடிவுக்கு கொண்டு வரவும், புதிய அரசமைப்பின் ஊடாக அனைத்து இன மக்களுக்கும் சமமான உரிமைகள் கிடைப்பதை உறுதி செய்யவும் தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பு நடவடிக்கை எடுத்துள்ளது என்று அந்த நேர்காணலில் ரிவின் தெரிவித்திருக்கிறார்.

சுமார் 37 வருடகாலமாக நடைமுறையில் உள்ள மாகாண சபை முறைமையால் நாட்டிற்கோ அல்லது தமிழ் மக்களுக்கோ எவ்விதமான பயனும் இதுவரையில் கிடைக்கவில்லை. மாறாக இலங்கையில் அநாவசியமான பிரச்சினைகளை தோற்றவிக்கும் வகையிலான நிலைமையே காணப்படுகிறது. எனவே சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையில் பிரச்சினைகளை தோற்றவிக்காத வகையிலான அரசியல் ரீதியிலான தீர்வுத்திட்டத்தை எமது ஆளும்தரப்பு முன்வைக்கும்.

தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளுக்கு தீர்வு ஏற்படுத்துவதாக கூறிய இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் ஊடாக 13ஆவது அரசமைப்பு திருத்தம் கொண்டுவரப்பட்டது.

அந்த ஒப்பந்தத்தை ஆரம்பகாலத்தில் இருந்தே நாங்கள் எதிர்த்து வந்துள்ளோம். நாட்டு மக்களின் விருப்பத்துக்கு மாறாகவும் அமைச்சரவையில் கூட அனுமதி பெறாமலுமே ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

இருப்பினும் அந்த ஒப்பந்தத்தின் பிரகாரம் அரசமைப்பின் ஊடாக நாட்டில் நடைமறைப்படுத்தப்பட்டுள்ள 13ஆவது திருத்தத்தின் அடிப்படையிலான மாகாண சபை முறைமையால் தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளுக்கு தீர்வு ஏற்படவில்லை. மாறாக இனங்களுக்கு இடையில் முரண்பாடுகளை தோற்றுவிக்கும் வகையிலான சூழலே காணப்படுகிறது.

எனவே பயனற்ற மாகாண சபை முறைமைக்குப் பதிலாக தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை நிறைவேறக்கூடியதும் அனைத்து இன மக்களுக்கும் சமமாக உரிமையை பெற்றுக்கொள்ளும் வகையிலுமான புதிய அரசமைப்பை உருவாக்கும் பணியில் தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்புச் செயல்படுகின்றது.

இதற்காக இலங்கையில் உள்ள அனைத்துத் தரப்பினர்களினதும் கருத்துக்களைக் கேட்டறிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். ஆட்சி அதிகாரத்துக்கு வந்து குறுகிய காலங்களே ஆகின்ற நிலையில், நாட்டின் பொருளாதார பிரச்சினைகளை தீர்ப்பதில் முன்னுரிமை அளித்து செயல்பட்டாலும், நிரந்தர தீர்வுகளுக்கான பல நடவடிக்கைளை முன்னெடுத்து வருகின்றோம்.

நடைமுறையில் உள்ள பழைய அரசமைப்பிற்குப் பதிலாக புதிய அரசமைப்பு உருவாக்குவதை முக்கிய பொறுப்பாக நாங்கள் கருதுகின்றோம்.

புதிய அரசமைப்பின் ஊடாக தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் தீர்வு கிடைக்கும். அப்போது 13ஆவது அரசியலமைப்பு திருத்தமோ அல்லது மாகாண சபை முறைமைக்கான தேவையோ நாட்டில் இருக்காது - என்று அவர் மேலும் தெரிவித்திருந்தார்.

அவரது இந்தக் கருத்துக்குத் தமிழர் தரப்பிலிருந்து இப்போது கடுமையான எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. இந்த நிலையிலேயே ஆளும்தரப்பின் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தும்படி சுமந்திரன் ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் கேட்டுள்ளார்.

## மனோ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர்களிடமும் அவர் இந்த கருத்தை கூறி இருப்பதை நான் அறிவேன்.

இப்போது 'மாகாணசபையை அகற்றி விட்டு அதற்கு பதில் நாடு தழுவிய, சம உரிமையை தருவோம்' என தேசிய மக்கள் சக்தித் தலைவர்கள் கூறுகிறார்கள். சம உரிமை வருவது நல்லதே. ஆனால், சம உரிமை என்பது வேறு. அதிகாரப் பகிர்வு என்பது வேறு.

மாகாணசபையை அகற்றுவது பற்றி தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் அறிக்கையிலும் கூறப்பட்டதாகத் தெரியவில்லை. ஒருவேளை வட மாகாண மாவட்டங்களில் தமிழ் மக்களின் வாக்குகள் பெரும்பான்மையாகக் கிடைத்துள்ளமையால், 'மாகாணசபை என்பதை நாம் ஏற்கமாட்டோம்' என்ற பழைய ஜேவிபியின் கொள்கை நிலைபாட்டை தமிழ் மக்கள் ஏற்றுக்கொண்டு அதை அகற்ற ஆணை தந்துள்ளார்கள் என தேசிய மக்கள் சக்தி நினைக்கிறதோ என தெரியவில்லை.

சம உரிமை வருவது நல்லதே. ஆனால், அது சுலபமான காரியம் அல்ல. இன, மத, மொழி ரீதியாக சம உரிமைகளை இந்த நாட்டில் உறுதிபடுத்த இன்னமும் நெடுந்தூரம் பயணிக்கவேண்டும். இங்கே இன்று அரசமைப்பிலேயே, இந்நாட்டின் மொழிகள். மதங்கள் மத்தியில் சம உரிமை உறுதிபடுத்தப்படவில்லை. அரச மதமான பௌத்த மதத்துடன் பௌத்த தேரர்கள், இந்நாட்டின் அதிகாரமையத்தில் இருக்கிறார்கள். மொழி தொடர்பில் சில பலவீனமான சட்டங்கள் ஆங்காங்கே இருந்தாலும், அவற்றை நடைமுறைப்படுத்த இந்நாட்டின் அரச அதிகார வர்க்கம் இடம்கொடுப்பதில்லை. மொழிகள் மத்தியில் சம உரிமையை அமுல் செய்யப் படாதபாடுபட்ட எனக்கு இது நன்கு தெரியும்.

சம உரிமை என்பது வானத்தில் பறக்கும் அழகான பறவை. மாகாணசபை என்பது கையில் இருக்கும் பறவை. வானத்தில் பறக்கும் அழகான பறவையை பற்றி கனவு கண்டுக்கொண்டு கையில் இருக்கும் பறவையை விட்டுவிடச் சொல்கின்றனவா, ஜேவிபியும், தேசிய மக்கள் சக்தியும் என கேட்க விரும்புகிறேன்.

சிங்கப்பூர் சிறிய நிலபரப்பு கொண்ட ஒரு நாடு. ஆகவே அங்கே மாகாணங்களை அமைத்து அதிகார பகிர்வு செய்யமுடியாது. ஆனாலும், அங்கேயும், ஜனாதிபதி பதவி என வரும்போது, சீனர், தமிழர், மலாய் என மூன்று இனத்தவர்களும் மாறி மாறி பதவி வகிக்கும் முறையில் அரசியல் சட்டம் இருக்கிறது. அவர்களது அமைச்சரவையில் எல்லா சிங்கப்பூர் இனத்தவரும் இடம்பெறுகிறார்கள்.

நல்லாட்சியின்போது, புதிய அரசமைப்பு உருவாக்கும் முயற்சி நடந்து. அதற்கான வழிகாட்டல் குழுவில் இன்றைய ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க அங்கத்துவம் பெற்று பணியாற்றினார். நானும் வழிகாட்டல் குழுவில் இடம்பெற்றேன். இன்னமும் பல இன, மத, அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் வழிகாட்டல் குழுவில் அங்கத்துவம் வகித்தார்கள்.

ஆகவே அத்தகைய புதிய அரசமைப்பு உருவாக்கப்படும்போது, இவை பற்றி சிநேகபூர்வகமாகக் கலந்துபேசி, வாத, விவாதம் செய்து, தீர்மானங்களுக்கு வரலாம். ஆனால், இப்போதே அவசரப்பட்டு,'மாகாண சபையை அகற்றியே தீருவோம். அது ஜேவிபியின் கொள்கை. அது மாறவில்லை. ஜேவிபியும், தேசிய மக்கள் சக்தியும் ஒன்றுதான்' என ஒருதலைபட்சமாக ஜேவிபியின் பொது செயலாளர் நண்பர் டில்வின் சில்வா கூறுவது ஏற்புடையதல்ல - என்று தெரிவித்துள்ளார்.

## பிரபாகரன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தடை செய்யப்பட்ட விடுதலைப் புலிகள் அமைப்பின் கொடி வல்வெட்டித்துறையில் ஏற்றப்பட்டிருந்தது. இவை தொடர்பாக விசாரணைகளைத் தொடங்கிய பொலிஸார் பிரபாகரனின் பிறந்த நாள் தொடர்பில் வாக்குமூலங்களைப் பதிவுசெய்திருந்தனர். அது தொடர்பில் நீதிமன்றத்தில் 'பி' அறிக்கையை நேற்று வழங்கினர்.

இதனை ஆராய்ந்த பருத்தித்துறை நீதிவான் கிருஷாந்தன், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொலிஷ்ஸாருக்கு உத்தரவிட்டதுடன் வழக்கை அடுத்த வருடம் ஜூலை மாதம் ஒன்பதாம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

## பயங்கரவாதத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்திகள் தெரிவிக்கின்றன. ஆனால் அந்த நபர்கள் மீது பொதுச் சட்டத்தின் கீழ் குற்றம் சாட்டப்பட்டுள்ளதோடு ஒருவர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். தற்போதைய ஆளும்தரப்பு மிகக் குறுகிய காலத்திற்குள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்தி மக்களைக் கைது செய்து தடுத்து வைப்பது இது இரண்டாவது தடவையாகும்.

முன்னதாக, அறுகம்குடா சம்பவம் தொடர்பாக மூவர் கைது செய்யப்பட்டு, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுப்பு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இப்போது நான்கு பேர் கைது செய்யப்பட்டமை தொடர்பிலான தகவல்களை பொலிஸ் ஊடகப் பிரிவு ஊடக அறிக்கையிலும் ஊடகவியலாளர் சந்திப்பிலும் முன்வைத்தது.

2024 ஆம் ஆண்டு நவம்பர் 30 ஆம் திகதி 1783/2024 என்ற இலக்கத்துடனான பொலிஸாரின் ஊடக அறிக்கையில், 'புலிகளின் மாவீரர் தினப் பரப்புரையை மேற்கொண்டு பொதுமக்களுக்கு இடையூறு விளைவித்த மூன்று சந்தேகநபர்கள் கைது' என்ற தலைப்பில் கைது குறித்த தகவல்கள் வெளியிடப்பட்டன.

நாட்டில் தடை செய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் ஒளிப்படம் மற்றும் காணொளியை முகநூல் சமூக வலைத்தளக்கணக்கின் ஊடாக வெளியிட்டமை தொடர்பிலும் கடந்த வருடங்களில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் மாவீரர்களைக் கொண்டாடும் போது எடுக்கப்பட்ட கானொளியை இந்த வருடம் கொண்டாட்டங்கள் நடத்தப்பட்டதாகக் கூறி முகநூல் சமூகவலைத்தளத்தில் பகிர்ந்தமை தொடர்பிலும் அவர்கள் மீது விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு கைதுகள் இடம்பெற்றதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

தடைசெய்யப்பட்ட அமைப்பின் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் முகமாக பேஸ்புக் ஊடாக இணையத்தில் பொய்யான பரப்புரைகள் மற்றும் காணொளிகளை பரப்பியதன் அடிப்படையில் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் மற்றும் பயங்கரவாத புலனாய்வு பிரிவினரால் தண்டனைக் கோவைச் சட்டத்தின் பிரிவு 27 மற்றும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் 120ஆவது பிரிவு ஆகியவற்றின் கீழ் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி குறித்த நபர்கள் மீது குற்றவியல் சட்டத்தின் கீழ் வழக்குத் தொடரப்படும் என அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் தற்காலிக ஏற்பாடுகளின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் தேசிய பத்திரிகை ஒன்றில் வெளியான செய்தி தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக டிசம்பர் 02 ஆம் திகதிய 'தினமின' பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது. பதில் பொலிஸ் மா அதிபரின் பணிப்புரைக்கமைய இந்த விசாரணை நடத்தப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாதத் தடைச் சட்டம் தற்காலிக ஏற்பாட்டுச் சட்டமாக ஆறு மாத காலத்திற்குள் நீக்கப்படும் எனத் தெரிவித்தே நிறைவேற்றப்பட்டது என்பதோடு, இந்த சட்டத்தின் அமுலாக்கம் பெரும் இனப்படுகொலைகளுக்கு இட்டுச்சென்றது என்பதையும் நினைவிற்கொள்ளவேண்டும். இது தமிழ் மக்களுக்கு எதிராகவும் இதற்போதைய ஆளும்தரப்புப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் இயக்கத்தின் அரசியல் செயற்பாடுகளுக்கு

தொடர்ச்சி 8ம் பக்கம்....

# வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இராமகிருஷ்ணமிசன் மனிதாபிமான உதவி

(சகாதேவராஜா)

மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் சமகால பெரு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வசதிகுறைந்த குடும்பங்களுக்கு சமைத்த உணவு பொதிகள் மற்றும் உலருணவுப் பொதிகளை வழங்கி வருகிறது.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள அமிர்தகழி பெரிய உப்போடை திருப் பெருந்துறை திராய்மடு ஆகிய பிரதேசங்களில் மொத்தமாக 900 குடும்பங்களுக்கு சமைத்த உணவை வழங்கியது.

மேலும் நே செட்டிபாளையத்தில் 50 குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.



மட்டு. இ.கி.மிசனின் மேலாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மஹராஜ் நேரடியாக இப் பிரதேசங்களுக்கு சென்று வழங்கி வைத்தார்.

சில பிரதேசங்களுக்கு இயந்திரப்படகு மூலம் கொண்டு சென்று உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

இ.கி.மிசன் இல்ல மாணவர்கள் அபிமானிகள் மற்றும் தொண்டர்கள் இப் பணியில் இணைந்து ஒத்துழைப்பு வழங்கினர்.



# எஹெட் பகுதி மக்களை மீள்குடியமர்த்த ஏற்பாடு!

(அஸ்லம் எஸ்.மௌலானா)

வெள்ள அனர்த்தத்தால் மோசமாகப் பாதிக்கப்பட்ட சாய்ந்தமருது, பொலிவேரியன் கிராமத்தில் அமைந்துள்ள எஹெட் வீட்டுத்திட்டத்திலுள்ள வீடுகளை சுத்தம் செய்து கழிவுகளை அகற்றி, இடம்பெயர்ந்துள்ள மக்களை மீள் குடியமர்த்துவதற்கான துரித வேலைத் திட்டம் கல்முனை மாநகர சபையால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.





தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.ஆதம் பாவாவின் அவசர வேண்டுகோளின் பேரில் இவ்வேலைத்திட்டம் மேற்கொள்ளப்படுகின்றது.

வெள்ள அனர்த்தத்தால் கடுமையாக பாதிக்கப்பட்ட எஹெட் வீட்டுத் திட்டத்திற்கு ஞாயிற்றுக்கிழமை விஜயம் செய்த அவர் பாதிக்கப்பட்ட வீடுகளை பார்வையிட்டதுடன் மக்களையும் சந்தித்து அவர்களது அவசர தேவைகள் குறித்து கேட்டறிந்து கொண்டார்.

சாய்ந்தமருது-மாளிகைக்காடு உலமாசபையினரும் சம்பவஇடத்துக்கு வருகை தந்து இப்பகுதி மக்களின் அவசர தேவைகள் குறித்து எடுத்துரைத்தனர்.

இதையடுத்து கல்முனை மாநகர ஆணையாளர் என்.எம். நௌபீஸ் அவர்களுடன் தொடர்புகொண்ட ஆதம்பாவா எம்.பி, இம்மக்கள் தமது வீடுகளுக்கு திரும்பும் வகையில் இப்பகுதியிலுள்ள அனைத்து வீடுகளையும் உடனடியாக சுத்தம் செய்து இயல்பு நிலையை ஏற்படுத்திக் கொடுக்குமாறு கேட்டுக் கொண்டதற்கமைவாக இப்பணிகள் துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.



இதற்காக இப்பகுதி மக்கள் நாடாளுமன்ற உறுப்பினர் ஆதம்பாவாவுக்கும் கல்முனை மாநகர சபைக்கும் நன்றிகளைத் தெரிவித்துள்ளனர்.

# பற்றிமாவின் 'சாதுரிய காக்கையார்' சிறுவர் நாடகத்திற்குத் தேசிய ரீதியில் பல விருதுகள்

(சகாதேவராஜா)

கிழக்கில் புகழ்பூத்த கல்முனை கார்மேல்பற்றிமாதேசியகல்லூரியின் 'சாதுரிய காக்கையார்'என்ற சிறுவர் நாடகத்திற்கு தேசிய ரீதியில் பல விருதுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

அரச சிறுவர் நாடக விழா - 2024 விருதுகள் வழங்கும் நிகழ்வு கொழும்பு அலரி மாளிகையில் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

அதன் போது குறித்த நாடகத்திற்கு பல விருதுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என்று கல்லூரி அதிபர் அருட் சகோதரர் றெஜினோல்ட் தெரிவித்தார்.





இந்த வருடத்திற்கான சிறந்த பிரதியாக்கத்திற்கான முதலாமிட விருது 'சாதுரிய காக்கையார்'நாடகத்திற்காக பாடசாலையின் பிரதி அதிபர் திருமதி சுகன்யா ரவீந்திரகுமாருக்குவழங்கப்பட்டது.

அதேவேளைசிறந்ததயாரிப்பாளருக்கான இரண்டாவது இடத்துக்கான விருது பாடசாலையின் ஆசிரியர் சிவகுரு நந்தகுமாருக்கு வழங்கப்பட்டது.

ஆசிரியர்திருமதிதர்ஷினிவித்தகராஜாக்கு சிறந்த ஒப்பனைக்கு முதலாம் இடத்துக்கான விருது கிடைக்கப்பெற்றது.

சிறந்த இசையமைப்புக்கான விருது ஆசிரியர் றொய்ஸ்டன் செலர்க்கும் , 'மீள நினை நாடகத்திற்கு'சிறந்த அரங்கு முகாமைத்துவத்திற்கானவிருது அற்புதத்துரை தர்மிதனுக்கும் கிடைக்கப்பெற்றது.

மேலும் சிறந்த நடிகைக்கான முதலாமிடம் மாணவி செந்தூரன் ஸ்ருதிக்கும் இரண்டாமிடமானது மாணவி தயாபரன் சப்தனாவுக்கும் கிடைக்கப்பெற்றது.

சிறந்தநடிகருக்கானமூன்றாமிடத்திற்கான விருதுமாணவன் அன்புராசாகிஷாளனுக்கும் மற்றும் சிறுவர் நாடக நடிகைக்கான திறமைச்சான்றிதழானது அருள்நேஷன் கேஷ்னா மற்றும் ரகுராமன்யுபாஷனாவுக்கும் வழங்கப்பட்டது.

மகள் காகம் பாத்திரத்தில் திறமையை வெளிப்படுத்திய நந்தகுமார் ஷேத்தரண்யாவுக்கு திறமைச் சான்றிதழும் வழங்கப்பட்டது.

# சாவ. இந்து பழைய மாணவர்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உலருணவு

சாவகச்சேரி இந்துக்கல்லூரி 1983 சாதாரண தரம் கற்ற மாணவர்களின் நிதி அனுசரணையில் சாவகச்சேரி லயன்ஸ் கழக உறுப்பினர் லயன் ஜெயபாலனின் ஒழுங்கமைப்பில் தேசிய மக்கள் சக்தி யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் லயன் ஜெ.ரஜீவனின் பங்குபற்றுதலுடன் அவரது கழகமாகிய யாழ்ப்பாணம் சிற்றி லயன்ஸ் கழகத்தினரால் ஆனையிறவு, தட்டுவன் கொட்டி பகுதிகளுக்கு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 100 குடும்பங்களுக்கு உலர் உணவு பொதிகள் வழங்கிவைக்கப்பட்டன.

காலைக்கதிர் Kalaikkathir

## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# மீண்டும் மீண்டும் ஒரே கோரிக்கை

மீண்டும் ஒரு தடவை பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் பயன்பாட்டுக்கு எதிர்ப்புக் கிளம்பியுள்ளதுடன் அந்தச் சட்டத்தை நீக்கவேண்டும் என்ற வலியுறுத்தலும் முன்வைக்கப்பட்டுள்ளது. இலங்கையில் நீண்ட காலமாக இந்தக் கோரிக்கை இருந்து வருகின்றபோதும், அந்தச் சட்டம் முழுமையாக நீக்கப்படவேண்டும் என்று போராடி வந்த ஒரு தரப்பு ஆட்சியைக் கைப்பற்றியுள்ள நிலையிலும் அந்தக் கோரிக்கை மீண்டும் மீண்டும் எழுப்பப்படுவதுதான் விந்தையானது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தேசியத் தலைவர் பிரபாகரனின் பிறந்தநாள், மாவீரர் தினம் ஆகியன தொடர்பாக இலங்கை காவல்துறையினர் மீண்டும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தைக் கையிலெடுத்தத்தைத் தொடர்ந்து இந்த எதிர்ப்புக் குரல் வெளிவந்திருக்கின்றது. மக்கள் போராட்ட முன்னணி இதனைப் பதிவு செய்துள்ளது. அது அந்த அமைப்பின் கோரிக்கை மட்டுமல்ல தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களினதும் சிங்கள மக்களில் கணிசமானவர்களதும் ஒட்டுமொத்தக் கோரிக்கை என்பதும் தற்போதைய ஆட்சியாளர்களுக்குச் சொல்லித்தான் தெரியவேண்டும் என்பதில்லை.

தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்த பின்னர் பயங்கரவாதத் தடைச் சட்டம் மூலம் ஆட்கள் கைது செய்யப்பட்டிருப்பது இது இரண்டாவது சந்தர்ப்பமாகும். இதற்கு முன்னர் பொத்துவில் மாவட்டம் அறுகம்குடா சுற்றுலா மையத்தில் வெளிநாட்டுச் சுற்றுலாவிகள் மீது, குறிப்பாக இஸ்ரேலியர்கள் மீது தாக்குதல் நடத்தப்படலாம் என்று மேற்குநாடுகளால் விடுக்கப்பட்ட எச்சரிக்கை தொடர்பான விசாரணைகளிலும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கிழேயே கைதுகள் இடம்பெற்றுள்ளன. இப்போது விடுதலைப் புலிகள் தொடர்பில் இரண்டாவது கைதுகள் இடம்பெற்றுள்ளன.

இவை தொடர்பில் சாதாரண சட்டங்களின் கீழேயே காவல்துறையினரால்நடவடிக்கைஎடுக்கமுடியும்என்கிறபோதும் உச்ச அதிகாரத்தைப் பயன்படுத்திப் பழக்கப்பட்ட அவர்கள் உடனடியாக அதனையே தமது கையில் எடுக்கிறார்கள். ஆளும் தரப்பு கொள்கை ரீதியில் அதனைத் தடுக்கத் தவறியிருப்பது அவர்களுக்கு வாய்ப்பாக அமைந்திருக்கின்றது. போதாக் குறைக்கு பயங்கரவாதத் தடைச் சட்டம் தவறானது அல்ல அதனைக் கையாண்டோரே கடந்த காலங்களில் தவறானவர்களாக இருந்தால்கள், அது சரியாகக் கையாளப்படும் பட்சத்தில் அது ஆபத்துக்களற்ற சட்டம் என்ற வகையில் ஆளும் தரப்பிலிருந்து விளக்கம் வேறு கொடுக்கப்பட்டிருப்பது காவல்துறை அதிகாரிகளுக்கு ஊக்குவிப்பாக அமைகின்றது.

இப்போது வரலாற்று ரீதியான தகவல்களுடன் இதனைக் கேள்விக்குள்ளாக்கியிருக்கும் மக்கள் போராட்ட முன்னணி இந்த ஆட்சியாளர்கள் நாடாளுமன்றத்தின் மூலம் இந்தப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது. அதுமட்டுமல்ல பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்குப் பதிலாக பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை நடைமுறைப்படுத்தக்கூடாது என்பதையும் அழுத்திச் சொல்லியுள்ளது. பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியில் வரைவாக்கப்பட்டது. தற்போதுள்ளதைவிட இன்னும் மோசமான மனித உரிமை மீறல்களுக்கு வித்திடும் வகையில் அது அமைந்திருந்த நிலையில் அதற்கும் கடும் எதிர்ப்புக் கிளம்பியது. அதனால் அந்தச் வரைவைச் சட்டமாக்காமல் ரணில் ஆட்சி தள்ளி வைத்தது. இப்போது அதை மீண்டும் கையிலெடுக்கக்கூடாது என்பதே மக்கள் போராட்ட முன்னணியின் கருத்து.

பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு எதிராகத் தொடர்ந்து குரல் கொடுத்து வந்த பலர் விடுதலைப் புலிகளுடன் தொடர்புபட்டது என்பதால் அண்மைய கைதுகள் தொடர்பில் அமைதி காத்து வருவது கவலைக்குரியது என்றாலும் மக்கள் போராட்ட முன்னணி அதனைக் கையில் எடுத்திருப்பது வரவேற்கத்தக்கது. அதன் கோரிக்கைகள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை எதிர்ப்போர் அனைவரதும் கோரிக்கைதான் என்பதை மனதில் கொண்டு ஆளும்தரப்பு நடவடிக்கை எடுப்பது அவசியம்




# நெடுந்தாரகைப் பயணிகள் அந்தரிப்பு

நெடுந்தீவுக்ககான வடதாரகை பயணிகள் படகு பழுது காரணமாக நேற்று மாலை பயணிகள் அந்தரித்துப் போயினர். குறிகாட்டுவானில் இருந்து மாலை 4 மணிக்கு நெடுந்தீவு நோக்கிப் புறப்பட்டிருக்கவேண்டிய பயணிகள் 3-1/2 மணித்தியாலங்களாகக் காத்திருந்தனர்.

குழந்தைகள், பெண்கள், வயோதிபர்கள் என நூற்றுக் கணக்கானோர் இரவு 7.20 வரை கடும் குளிரில் குறிகாட்டுவான் இறங்குதுறையில் விறைத்துக்கிடந்தனர்.

வடதாரகைப் படகு மிக அண்மையில்தான் பல கோடி ரூபாய் செலவில் கடற்படையின் பொறியியல்பிரிவினரால் திருத்தியமைக்கப்பட்டு சேவைக்குத் திரும்பியிருந்தது. எனினும் அடிக்கடி பழுதடைகிறது.

வடதாரகை மற்றும் படகுகள் பழுதாவதால் நெடுந்தீவு மக்களின் நாளாந்தப் பயணம் அடிக்கடி பெரிதும் பாதிக்கப்பட்டுவருவதாக அம் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.



# கற்கோவளம் நலன்புரி முகாமில் தகறாறு செய்தோருக்கு மறியல்

மழை வெள்ள பாதிப்புக்குள்ளான மக்கள் தங்கவைக்கப்பட்டிருந்த கற்கோவளம் பாடசாலையில் தகராறில் ஈடுபட்டதாக மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில், அரச உத்தியோகத்தரின் கடமைக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்ட அப்பகுதியை சேர்ந்த இருவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கற்கோவளம் கிராம உத்தியோகத்தர் பிரிவிற்குட்பட்ட மக்கள் அங்குள்ள மெதடிஸ்த மிசன் தமிழ் கலவன் பாடசாலை நலன்புரி முகாமில் தங்கவைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வந்தனர்.

இதன்போது உணவு மற்றும் நிவாரண பொருட்கள் வழங்கும் போது நலன்புரி முகாமில் தங்கவைக்கப்பட்டிருந்த சிலர் தொடர்ந்தும் தகராறில் ஈடுபட்டு கடமையை செய்யவிடாது இடையூறாக செயற்பட்டு வந்துள்ளமை தொடர்பில் அப்பகுதி கிராம உத்தியோகத்தரினால் பருத்தித்துறை பொலிசில் கடந்த வெள்ளிக்கிழமை (நவம்பர்-29) முறைப்பாடு செய்யப்பட்டது.

முறைப்பாடு தொடர்பில் ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் அப்பகுதியை சேர்ந்த இருவர் பருத்தித்துறை பொலிசாரால் கைது செய்யப்பட்டனர். அவர்கள் இருவரையும் பருத்தித்துறை நீதிவான் கிருஷாந்தன் முன்பாக பருத்தித்துறை பொலிசார் நேற்று முற்படுத்தினர். வழக்கை விசாரித்த நீதிவான்

# கிராமசேவகரை மாற்றக்கோரி பருத்தித்துறையில் ஆர்ப்பாட்டம்

தமது பிரிவு கிராமசேவகரை இடமாற்ற வலியுறுத்தி பருத்தித்துறை பிரதேச செயலகத்திற்கு முன்பாகப் பலர் நேற்றுப் போராட்டம் நடத்தியுள்ளனர்.

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கற்கோவளம் கிராம உத்தியோகத்தர் பிரிவிற்குட்பட்ட மக்கள் கற்கோவளம் மெதடிஸ்த மிசன் தமிழ் கலவன் பாடசாலை நலன்புரி முகாமில் தங்கவைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றனர். அங்கு தங்கவைக்கப்பட்டிருந்த சிலர் தொடர்ந்தும் தகராறில் ஈடுபட்டு அரச கடமையை செய்யவிடாது இடையூறாகச் செயற்பட்டு வந்துள்ளமை தொடர்பில் அப்பகுதி கிராம உத்தியோகத்தரினால் பருத்தித்துறை பொலிசில் நவம்பர் 29 முறைப்பாடு செய்யப்பட்டது.

இந்த முறைப்பாடு தொடர்பில் ஞாயிற்றுக்கிழமை அப்பகுதியை சேர்ந்த இருவரை பருத்தித்துறை பொலிசாரால் கைது செய்தனர். இந்நிலையில் கைது செய்யப்பட்ட இருவரது குடும்பத்தினருமே நேற்று திங்கட்கிழமை காலை பிரதேச செயலகத்திற்கு முன்பாகப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்களை நேரில் அழைத்து பருத்தித்துறை பிரதேச செயலாளர் சத்தியசீலன் கலந்துரையாடினார். இதன்போது, குறித்த கைது நடவடிக்கை திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் உடனடியாக அவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுப்பதுடன் இவற்றுக்கு காரணமான கிராம உத்தியோகத்தரை உடனடியாகவே இடமாற்றம் செய்யவேண்டும் எனவும் அவ்வாறு செய்யாவிட்டால் பிரதேச செயலகத்தின் முன்பாக தீ குளிப்போம் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அவர்களின் கோரிக்கை தொடர்பில் என்ன நடவடிக்கை எடுக்கமுடியும் என்று ஆராய்வார் என்று பிரதேச செயலர் உறுதியளித்ததைத் தொடர்ந்து போராட்டத்தை அவர்கள் கைவிட்டனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# வடக்கு லயன்ஸ் கழகங்களால் லயன் ரஜீவன் எம்.பிக்கு கௌரவம்

யாழ்ப்பாணம் - கிளிநொச்சி தேர்தல் தொகுதியில் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு தேசிய மக்கள் சக்தியில் வெற்றிபெற்ற லயன் ரஜீவன் ஜெயச்சந்திரமூர்த்திக்கு வடபகுதி லயன்ஸ் கழகங்கள் இணைந்து கடந்த சனிக்கிழமை மிகப்பெரிய கௌரவத்தை வழங்கியிருந்தன.

வடக்கு மாகாணத்தில் இருந்து லயன்ஸ் கழக ஆளுநராக இதுவரை தெரிவாகியுள்ள வைத்தியர் லயன் வை.தியாகராஜா, லயன் எஸ்.எஸ்.துங்கராஜா ஆகியோர் விருந்தினராகக் கலந்துகொண்டனர்.





இந்த நிகழ்வில் வடக்கு மாகாணத்திலுள்ள ஒவ்வொரு லயன்ஸ் கழகங்களும் அரசியல் பேதங்கடந்து தமது நண்பர் என்ற ரீதியில் நாடாளுமன்ற உறுப்பினர் லயன் ஜெ.ரஜீவனுக்குத் தமது கௌரவத்தை வழங்கியிருந்தன.

கடந்த வாரம் தென்னிலங்கை லயன்ஸ் கழகங்கள் இணைந்து லயன் ஜெ.ரஜீவனுக்கு தெற்கில் மாபெரும் கௌரவம் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கல்முனை கடற்கரை பள்ளியின் 203ஆவது கொடியேற்ற நிகழ்வு

(ஷினாஸ், சர்ஜூன்)

அம்பாறை மாவட்டம் கல்முனை மாநகர மக்களால் ஒவ்வொரு வருடமும் நடத்தப்பட்டு வரும் ஷாஹுல் ஹமீது வலியுல்லாஹ் நாயகம் அன்னவர்களின் நினைவாக கல்முனை கடற்கரைப் பள்ளிவாசல் நாஹூர் ஆண்டகை தர்காவில் 203 ஆவது கொடியேற்று விழா நேற்று (திங்கட்கிழமை) ஆரம்பமானது.



உலமாக்கள், பக்கீர் ஜமாஅத்தினர், நிர்வாகிகள், ஊர் மக்கள் புடைசூழ கல்முனை முஹ்யித்தீன் ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலில் இருந்து புனித கொடியானது தீன் கலிமா முழக்கத்துடன் ஊர்வலமாக எடுத்து வரப்பட்டு கடற்கரைப் பள்ளிவாசல் நாஹூர் ஆண்டகை தர்கா மினாராக்களில் ஏற்றி வைக்கப்பட்டது.



கொடி ஏற்றிய தினமான இன்றில் இருந்து தொடர்ந்து 12 நாள்களுக்கும் பாதுஷா ஷாஹுல் ஹமீது வலியுல்லாஹ் நாயகம் (கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அஸீஸ்) அன்னவர்களின் மீதான புனித மௌலித் ஷரீப் பாராயணம், பக்கீர் ஜமாஅத்தினரின் புனித ரிபாஈ ராதிப், உலமாப் பெருமக்களின் சன்மார்க்கச் சொற்பொழிவு என்பன இடம்பெறவுள்ளதோடு கொடியிறக்கு தினமான எதிர்வரும் டிசெம்பர் 14 ஆம் திகதி நிறைவடையவுள்ளதுடன் அன்றைய தினம் மாபெரும் கந்தூரி அன்னதானம் வழங்கி வைக்கப்படவுள்ளது.

இந் நிகழ்வில் அரசியல் பிரமுகர்கள், அரச உயர் அதிகாரிகள், உலமாக்கள், நாட்டின் பல்வேறு பகுதிகளை சேர்ந்த பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# நீர்க்குழாய் திருத்த வேலைகளை உதுமாலெப்பை பார்வையிட்டார்

(சகாதேவராஜா)

அம்பாறை மாவட்டத்தில் பாரிய நீர்க்குழாய் சேதமான நயினாகாடு வடசேரிக்கு சென்ற அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.உதுமாலெவ்வை அங்கு இடம்பெற்றுவரும் குழாய் திருத்த வேலைகளை பார்வையிட்டார்.




அதன் போது அவர், தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின் அக்கரைப்பற்று பிராந்திய முகாமையாளர் ஹைதர்அலி, பொறியியல் பிரிவுப் பொறியியலாளர் தாமோதரம் விநாயகமூர்த்தி , இயக்கமும் பராமரிப்பும் பிரிவிற்கான பொறியியலாளர் பாக்கியராஜா மயூரதன் சம்மாந்துறை பிரதேச பொறியியலாளர் வேல்கஜன் காரைதீவு பிரதேச காரியாலய பொறுப்பதிகாரி பொறியியலாளர் விஜயரெத்தினம் விஜயசாந்தன் ஆகியோரைச் சந்தித்து நிலைவரங்களை கேட்டறிந்தார்.

சபையினர் கேட்டுக் கொண்டதற்கிணங்க எக்ஸ்கவேற்றர் இயந்திரமொன்றை அம்பாறை நீர்ப்பாசன பொறியியலாளரிடமிருந்து பெற்றுக் கொடுத்துள்ளார்.

விரைவாக குடிநீர் வழங்கப்படுவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உயரதிகாரிகளை தொடர்புகொண்டு கோரிக்கை விடுத்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் உதுமாலெப்பையிடம் கேட்டபோது -

மிகுந்த சிரமத்தின் மத்தியில் தான் அங்கு செல்ல முடிந்தது. உண்மையில் காரைதீவு, நிந்தவூர், மாளிகைக்காடு, சாய்ந்தமருது போன்ற பிரதேசங்களை சேர்ந்த 72 ஆயிரம் மக்கள் தண்ணீர் இன்றி தவிப்பதை அறிந்துதான் அங்கு சென்றேன் .அவர்கள் எக்ஸ்கவேற்றர் இயந்திரமொன்றை கேட்டார்கள் .அதைப் பெற்றுக் கொடுத்திருக்கின்றேன் .மிக விரைவாக குடிநீர் கிடைக்கும். - என்றார்.

கடந்த ஆறு நாள்களாக காரைதீவு பிரதேசத்திற்கு தண்ணீர் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.






# மாவடிப்பள்ளி இறந்த மாணவர்களுக்கு உரிய நீதி கிடைக்கப்பெறவேண்டும்

## முகம்மட் ரஸ்மின் வலியுறுத்து



(பாறுக் ஷிஹான்)

தேர்தல் காலங்களில் மட்டும் மைக் முன்னால் பேசிவிட்டு இலட்சக் கணக்கில் செலவிடுகிறார்கள் .ஒரு சிலர் உதவி செய்கின்றார்கள். தவிர இன்னும் பலரை காண முடியவில்லை.இந்த விடயத்தில் இன ஜாதி மதம் பாக்க முடியாது. அனர்த்தம் என்பது யாவருக்கும் சமம். பசி என்பது எல்லோருக்கும் பொதுவானது.

பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு உரிய நீதி கிடைக்கப்பெற வேண்டும் என 'வி ஆ வண்' அமைப்பின் இணைப்பாளர் முகம்மட் ரஸ்மின் குறிப்பிட்டார்.

அண்மையில் வெள்ள நீரால் பாதிக்கப்பட்ட அம்பாறை மாவட்ட மக்களுக்கு நிவாரண உதவி வழங்குதல் மற்றும் மாவடிப்பள்ளி அனர்த்தத்தில் உயிரிழந்த மாணவர்களின் ஜனாசா வீடுகளுக்கு சென்று ஆறுதல் கூறிய பின்னர் ஊடகங்களில் கருத்து தெரிவிக்கும் போது மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் ஆக்ரோசமாக மேலும் தெரிவிக்கையில்

சிலநாடுகள் இராணுவ பயிற்சியை கட்டாயமாக்கி உள்ளன. இயற்கை அனர்த்தங்கள் போன்ற செயற்பாடுகளுக்கு முகம் கொடுப்பதற்காக அந்நாடுகள் இவ்வாறு பயிற்சிகளை கட்டாயமாக்கி வைத்திருக்கிறார்கள்.அது மாத்திரமன்றி பாடசாலைகளிலும் இவ்வாறான பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும். இலங்கையில் பிரபலமான பாடசாலைகளில் நீச்சல் குளங்கள் இருக்கின்றன. அவர்களுக்கு நீச்சல் பயிற்சி வழங்கப்படுகின்றது. இதர பயிற்சிகள் எல்லாம் உள்ளன.

அம்பாறை மட்டக்களப்பு வன்னி உள்ளிட்ட சிறுபான்மை மக்கள் உள்ள பகுதிகளிலும் பெரும்பான்மை மக்கள் வாழுகின்ற சேருநுவர போன்ற பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் மேற்கூறிய வசதிகளை இல்லை. ஆனால், இங்கு கடல் ஆறு உள்ளன. பயிற்சிப்பாளர்கள் இராணுவத்தினர் அப்பகுதிகளில் மாணவர்களை பயிற்சிகளில் ஈடுபடுத்த வேண்டும். விழிப்புணர்வு நிகழ்வுகள் நடத்தப்பட வேண்டும். வெள்ள அனர்த்தங்கள் எவ்வாறு ஏற்படுகின்றது எவ்வாறு தடுப்பது போன்ற திட்டங்களை இதனூடாக மிகச் சிறப்பாக செயற்படுத்த முடியும். இதில் அரசாங்க உடனடியாக கவனம் செலுத்த வேண்டும். இனிவரும் காலங்களில் இவ்வாறான அழிவுகளில் இருந்து பாதுகாப்பு பெறவேண்டும்.

இனிவரும் காலங்களில் பெரிய புயல்கள் வர காத்திருக்கின்றது. தற்போது அது தொடர்பான தகவல்கள் வெளியாகி கொண்டிருக்கின்றது. இதுதவிர தமிழகத்தின் தென்கோடி கேரளா உட்பட சில பகுதிகளுக்கு இந்த பாதிப்புகள் வர இருக்கின்றது. இந்த நிலையில் அந்த நாடுகள் எவ்வாறு முகாமைத்துவ செயற்பாடுகளை முன்னெடுக்கிறார்கள் என்பது தொடர்பாக நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். இன்று அம்பாறை மாவட்டத்தின் பல பகுதிகளிலும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய மக்களுக்கு உதவிகளை செய்து செய்து வருகிறோம்.

மாவட்டத்தின் முழு பகுதிகளும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருக்கின்றது. உச்சகட்டமாக சம்மாந்துறை பிரதேசம் வெகுவாக பாதிக்கப்பட்டு இருக்கின்றது. அதிலும் அரபுக் கல்லூரியில் கல்வி கற்ற ஆறு மாணவர்கள் உட்பட ஏனைய இருவர் மரணம் அடைந்து சோக சம்பவமும் பதிவாகி இருக்கின்றது.

அம்பாறை மாவட்டத்தின் பொத்துவில் தொடக்கம் கடைக்கோடி வரையும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருக்கின்றது. அல்லாஹ்வின் உதவினாலும் எமது முயற்சியாலும் பாலஸ்தீன மக்களின் காணொளிகளை பார்க்கின்றவர்கள். அதன் அனுதாபிகள் செய்த உதவிகளின் ஊடாக இன்று பொத்துவில் நிந்தவூர் சம்மாந்துறை உள்ளிட்ட சில பகுதிகளில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நாம் பல்வேறு உலர் உணவுப் பொருள்களை கொடுத்து வருகின்றோம்.

இங்கு ஒரு விடயத்தை குறிப்பிட்டு காட்டலாம் என்று நினைக்கின்றேன். எமது நாட்டில் ஒரு மாதத்திற்கு முன்னர் இடம்பெற்ற தேர்தலில் எல்லா பகுதிகளிலும் நூற்றுக்கணக்கான வேட்பாளர்கள் களம் இறங்கினார்கள். குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் மாத்திரம் 60 இற்கும் மேற்பட்ட கட்சிகள் சுயேச்சை குழுக்கள் போட்டியிட்டன. குறிப்பாக எம்.பிக்களாக தெரிவுசெய்யப்பட்டவர்கள் கூட குறிப்பாக வாய்க்காலில் தண்ணீர் செல்கிறதா நீர் எங்கு செல்கின்றது என்பதைத்தான் பார்க்கின்றார்கள். அந்த விடயங்களை அனர்த்த முகாமைத்துவ அதிகாரிகள் தான் பார்ப்பார்கள்.

நாங்கள் பார்க்க வேண்டியது என்னவென்றால் மக்கள் சாப்பிடாமல் இருக்கிறார்களா? அவர்களுக்கு எவ்வாறான வழியில் உதவி செய்ய வேண்டும். உணவில்லாமல் இருக்கிறார்களா? தங்குவதற்கு இடம் இல்லாமல் இருக்கிறார்களா?என்று ஆராய வேண்டும்.

தேர்தல் என்று வருகின்ற போது மக்களுக்காகவே நாங்கள் செலவு செய்கிறோம் என்று வரும்போது லட்சக் கணக்கில் செலவிடுகிறார்கள். அவ்வாறு செலவு செய்பவர்கள் இவ்வாறான விடயங்களில் தான் செலவழிக்க வேண்டும். இவ்வாறான நிலைமைகளில் கூட மக்களோடு மக்களாக ஒரு சிலர் உதவி செய்கின்றார்கள். தவிர இன்னும் பலரைக் காண முடியவில்லை.இந்த விடயத்தில் இன ஜாதி மதம் பாக்க முடியாது. அனர்த்தம் என்பது யாவருக்கும் சமம், பசி என்பது எல்லோருக்கும் பொதுவானது.

இவ்விடயத்தில் அனைத்து தலைவர்களும் சமூகவியலாளர்களும் ஒன்றாக செயல்படுகின்ற போது நிறைய நன்மைகள் எம்மக்களுக்கு கிடைக்க வாய்ப்பு இருக்கின்றது. பாதிக்கப்பட்ட மக்களை உடனடியாக மீட்டெடுப்பதற்கு வாய்ப்பு இருக்கின்றது. எனவே தேர்தல் காலங்களில் மட்டும் மைக் முன்னால் பேசிவிட்டு முகநூலில் புகைப்படங்களை பதிய விட்டு நாங்கள் அங்கு போனோம் இங்கு போனோம் என்று செய்திகளை வெளியிடாது. இந்த விடயத்தில் வாரி வழங்க முன் வர வேண்டும்.

சம்மாந்துறை மண்ணில் நடந்த ஓர் அனர்த்தம் ஆறு மதரசா மாணவர்கள் உட்பட எட்டு பேர் மரணமடைந்த சம்பவம் ஏற்க முடியாதது. கட்டுக்கடங்காத வெள்ளத்தால் இந்த சம்பவம் இடம் பெற்றிருக்கிறது. நான் இங்குள்ள சகல ஜனாஸா வீடுகளுக்கும் சென்று இருந்தேன். அவ்வாறு சென்ற பின்னர் அங்கு அந்த வீடுகளில் கூறப்பட்ட ஆதங்கங்களை நான் உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகின்றேன். முக்கியமான சம்பவம் ஒன்று இந்த பிரதேசத்தில் நடைபெற்று இருக்கின்றது. ஆனால் எந்த ஒரு ஊடகத்திலும் இந்த விடயம் பேசப்படவில்லை.இதனால் ஒரு சந்தேகம் எழுகின்றது.அதாவது சம்பவம் இடம் பெற்ற மறுநாள்தான் பாதுகாப்பு படையினர் மீட்பதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கின்றார்கள்.என்ற விடயத்தை மையத்து வீடுகளுக்கு செல்கின்ற போது நான் அறிந்து கொண்டேன்.

ஏன் இவ்வாறான அசம்பந்தப் போக்கு ஏற்பட்டது என்பதை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கண்டறிய வேண்டும். இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து மதரஸாவின் பொறுப்பாளர்கள் கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள். ஆனால் மதரஸா நிர்வாகிகள் பெற்றோருடன் சிறப்பான தொடர்புகளை மேற்கொண்டு வந்திருக்கிறார்கள். எனவே, மதரஸா நிர்வாகத்தினர் ஓர் ஒழுங்கு முறையில் தான் விடுமுறைக்கு மாணவர்களை அனுப்பி இருக்கிறார்கள். ஆனால் மதரஸா நிர்வாகத்தை கைது செய்து சட்டம் தன் கடமையைச் செய்கின்றது என்று வெளியுலகத்திற்கு காட்ட முயற்சிக்கிறார்கள். இந்த செயற்பாடு ஒரு பக்க நியாயத்தைக் காட்டுவதற்கு முயற்சிக்கப்படுகின்றது என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

இதற்கு முதலில் பதில் சொல்ல வேண்டியவர்கள் இந்த அனர்த்த முகாமைத்துவ அமைச்சை சேர்ந்தவர்கள். அதாவது சம்பவம் நடைபெற்று மாலை ஆகிவிட்டது. ஆனால் மறுநாள் காலை வரை என்ன செய்தீர்கள் என்பதை அவர்கள் சொல்ல வேண்டும். ஏன் உங்களுக்கு ஒரு படகு இல்லாமல் போய்விட்டதா? வசதி வாய்ப்புகள் இல்லையா? என இவ்வாறான கேள்விகளை எவரும் கேட்பதில்லை .ஆனால் ஜனாஸா வீடுகளுக்கு சென்று அங்கே புகைப்படம் எடுத்து முகநூல்களின் போடுபவர்கள் தான் அதிகம். தயவு செய்து ஜனாஸாக்களை வைத்து அரசியல் செய்ய வேண்டாம்.

ஆகவே பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும். அரசாங்கம் நீதியாக செயற்படும் என்று தான் அனைத்து மக்களும் புதிய அரசாங்கத்தை தெரிவு செய்து இருக்கிறார்கள். ஆனால் அரசாங்கம் தான் புதியது அதிகாரிகள் புதியவர்கள் அல்லர். அதிகாரிகள் பழையவர்கள். எனவே மதரஸா நிர்வாகத்தினர் நான்கு பேர் கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள் என்று கடந்து சென்று விட முடியாது. மரணித்த மதரஸா மாணவர்களுக்கான நீதி கிடைக்க வேண்டும். இந்த மாணவர்களை மீட்பதற்கு ஏன் கால தாமதம் நடந்தது. எந்த தரப்பினால் இந்த கால தாமதம் ஏற்பட்டது. இந்த காலதாமதத்திற்கு யார் பொறுப்பு. என அனைவரும் குரல் எடுப்ப வேண்டும். நடந்த மரணத்தை அல்லது ஏதாவது உயிரை எவராலும் மீட்க முடியாது.

எனவே மீண்டும் இவ்வாறான ஒரு மரணம் இந்த பகுதியில் இடம் பெறக் கூடாது. ஏலவே இதுபோன்ற சம்பவம் கிண்ணியா பகுதியில் இடம்பெற்று இருந்தது. நாடே இந்த விடயத்தை பேசிக் கொண்டுதான் இருக்கின்றது. இந்த மாணவர்கள் மரணித்த இடம் ஒரு விவசாய நிலப்பரப்பு. ஆறு அல்லது குளமாகவோ இருந்தால் பரவாயில்லை. ஆனால் இது ஒரு விவசாய நிலம் இந்த விவசாய பரப்பு நிலத்தில் தான் அந்த உழவு இயந்திரம் விபத்திற்கு உள்ளானது. எனவே இந்த இடத்தில் ஏதோ ஒரு பிழை இடம்பெற்றுள்ளதாக சகல தரப்பும் சுட்டிக் காட்டுகின்றனர்.

ஆனால் இங்கு கடல் பகுதி உள்ள பிரதேசம் அதிகளவான மீனவர்களை கொண்ட பகுதி இங்கே எமது தொப்புள் கொடி உறவுகளான தமிழ் சகோதரர்கள் கூட நாங்கள் இந்த விடயத்தில் உதவி செய்ய முன்வருகிறோம் என்று தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் அங்கு பாதுகாப்பு காரணங்களை காட்டி அவர்களை மீட்பு பணியில் அனுமதிக்காதமை இங்கே சுட்டிக்காட்டப்பட வேண்டியதுதான்.

எனவே இந்த மீனவர்களை அனுமதித்து இருந்தால் மீட்பு பணி சுலபமாக இருந்திருக்கும். ஆனால் பாதுகாப்பு தரப்பினர்கள் எந்தவித செயற்பாடுகளை முன்னெடுக்காமல் கைகட்டி பார்த்துக் கொண்டிருந்ததாக பொதுமக்கள் குற்றம் சுமத்தி இருக்கிறார்கள். எனவே பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு உரிய நீதி கிடைக்கப்பெற வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

# வவுனியா கொலை சம்பவம் தொடர்பாக ஒருவர் கைது

வவுனியா, சேமமடு, இளமருதங்குளம் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை மாலை வாளால் வெட்டி ஒருவரை கொலை செய்த சம்பவத்துடன் தொடர்புபட்டதாக சந்தேகத்தின் பேரில் ஒருவர் ஓமந்தைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஓமந்தை பொலிஸ் பிரிவுக் குட்பட்ட இளமருதங்குளம் பகுதியில் பழையபகைஒன்றின்காரணமாகஐந்து பேர்கொண்டகுழு வவுனியாவிலிருந்து இளமருதங்குளம் பகுதிக்குச் சென்று அங்கு வசிக்கும் 46 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவரை வாளால் வெட்டி கொலை செய்தி ருந்தனர்.

இச்சம்பவத்துடன் தொடர்புடை யதாக கூமாங்குளத்தை சேர்ந்த வாகன உரிமையாளர் கைது செய்யப்பட்டுள்ளார். இவரை வவுனியா நீதிமன்றத்தில்பொலிஸார்ஆஜர்படுத்த நடவடிக்கைஎடுத்துள்ளதுடன், ஏனைய சந்தேக நபர்களும் அடையாளம் காணப் பட்டுள்ளனர்.(100)

# ஐஸ் போதைப்பொருளுடன் சம்மாந்துறை நபர் கைது

(பாறுக் ஷிஹான்)

ஐஸ்போதைப்பொருளுடன் ஒருவரை ஞாயிற்றுக்கிழ மை மாலை 3.00 மணியளவில் சம்மாந்துறை விசேட அதிரடிப் படையினர்கைது செய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக் குட்பட்ட சென்னல்கிராமம் 01 பகுதியில் சம்மாந்துறை விசேட அதிரடிப்படை அதிகாரிகளுக்குகிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புநடவடிக்கைகளின் போதே சந்தேகத்திற்கிடமாக நடமாடிய சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

சம்மாந்துறை சென்னல் கிராமம் 01, பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது, கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் இருந்து ஒரு கிராம் 240 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதனையடுத்து, சந்தேக நபரை சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும், இந்த கைது நடவடிக்கையானதுசம்மாந்துறை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ரத்னமல்லவின் பணிப்புரைக்கமைய உப பொலிஸ் பரிசோதகர்களான ஜெயஸ்ரீ மற்றும் விஜயஸ்ரீ ஆகியோரினால் குறித்த கைது முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அரபுக் கல்லூரி மாணவர்கள் உயிரிழப்பு: அதிபர், ஆசிரியர் பிணையில் விடுவிப்பு

(செயிட் ஆஷிப்)

காரைதீவு - மாவடிப்பள்ளி பாலத்தில் உழவு இயந்திரம் வெள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் அரபுக் கல்லூரி மாணவர்கள் 06 பேர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிந்தவூர் காஷிபுல் உலூம் அரபுக் கல்லூரியின் அதிபர் மற்றும் ஆசிரியர் ஆகியோர் தலா இரண்டு லட்சம் ரூபா சரீர பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 26 ஆம் திகதி பிற்பகல் குறித்த மாணவர்களையும் இன்னும் சிலரையும் ஏற்றிகொண்டு சம்மாந்துறைக்கு சென்று கொண்டிருந்தஉழவுஇயந்திரம்மாவடிப்பள்ளி பாலத்தில் வெள்ளத்தில் சிக்கி கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் அதில் பயணித்த மாணவர்கள் உட்பட 8 பேர் உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டனர்.

இச்சம்பவம்தொடர்பில்அரபுக்கல்லூரியின் அதிபர், ஆசிரியர் மற்றும் 02 உதவியாளர்கள் கைது செய்யப்பட்ட நிலையில் மத்ரஸாவின் அதிபர் மற்றும் ஆசிரியர் ஆகிய இருவரும் டிசெம்பர் 02 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இவ்வழக்கு விசாரணைக்காக நேற்று (திங்கட்கிழமை) சம்மாந்துறைநீதிவான்நீதிமன்ற நீதிபதி கே. கருணாகரன் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டபோது அரபுக் கல்லூரியின் அதிபர் மற்றும் ஆசிரியர் தலா இரண்டு லட்சம் ரூபாய் சரீர பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

# பாட்டாளிபுரத்தில் 53 பேருக்கு அரிசி பொதி வழங்கி வைப்பு

(ஹஸ்பர் ஏ.எச்)

திருகோணமலை மாவட்டத்தில் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மூதூர் கிழக்கு - பாட்டாளிபுரத்தில்

53பேருக்கு அரிசி பொதி வழங்கி வைப்பு பாட்டாளிபுரம் பூஞ்சோலைஅருள்மிகுபத்திர காளி அம்பாள் ஆலய ஏற்பாட்டில் எம் கடமை அமைப்புமூலம்சனிக்கிழமைவழங்கப்பட்டது. ஆலயத்தின் ஏற்பாட்டில் இங்கு மேலதிக கல்வி பெறும் மாணவர்களின் பெற்றோர் கலந்து கொண்டு அரிசி பொதியை பெற்றுக் கொண்டனர்.

இந்நிகழ்வில் ஆலயத்தின் பொருப்பாளர் பொ. சற்சிவானந்தன்கிராமசேவகர், எம்கடமை பணிப்பாளர் ஜீவேந்திரன். சம்பூர் மகாவித்தியாலய அதிபர் பு.பிரபாகரன், சட்டத்தரணி முகமத் உட்பட பலர் கலந்துகொண்டனர்.








## பயங்கரவாதத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிராகவும் முஸ்லிம் மக்களுக்கு எதிராகவும் பயன்படுத்தப்பட்டது.

இறுதியாக இந்தச் சட்டம் போராட்டத்திற்கு எதிராகப் பயன்படுத்தப்பட்டது. இந்தச் சட்டமூலம் முன்வைக்கப்பட்ட காலத்திலிருந்து மக்கள் விடுதலை முன்னணி கடுமையாக எதிர்த்ததையும் தற்போதைய ஆளும்தரப்பு ஆட்சிக்கு வரும்வரை தொடர்ந்து எதிர்த்து வந்ததையும் இங்கு நினைவிற்கொள்ளவேண்டும்.

தேசிய மக்கள் சக்தியும் அதே நிலைப்பாட்டில் இருந்து செயற்பட்டுவந்ததோடு இந்தச் சட்டத்தை நீக்கிப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தைக் கொண்டுவர அப்போதைய ஆளும்தரப்பு முயற்சித்தபோதும் பல்வேறு நடவடிக்கைகள் மூலம் அதற்கு எதிர்ப்பை வெளியிட்டது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கவேண்டும் என்ற கோரிக்கையானது சிலர் கூறுவதுபோல இந்தச் சட்டம் ஆளும்தரப்பால் நல்லெண்ணத்துடன் பயன்படுத்தப்பட்டதா இல்லையா என்ற எளிய வாதமாகச் சுருக்கப்படவில்லை.

மேலும் வரலாற்று ரீதியாக இச் சட்டம் தமிழ் முஸ்லிம் மற்றும் முற்போக்கு மக்கள் மற்றும் அமைப்புகளுக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்ட ஒரு சூழலில் இருந்தே நீக்கப்படவேண்டும் என்ற கோரிக்கை வருகிறது. மேலும் இச்சட்டத்தில் குற்றங்களாகக் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்தும் குற்றவியல் சட்டம் ஆபத்தான போதைப்பொருள் சட்டம் போன்ற ஏற்கனவே உள்ள கணிசமான சட்டங்களின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது.

தொழில்நுட்ப ரீதியாக நீதித்துறை மேற்பார்வையின்றி நிறைவேற்று அதிகாரத்தின் எதேச்சதிகார விருப்பப்படி தனிநபர் சுதந்திரத்தை கட்டுப்படுத்த இந்தச் சட்டம் பயன்படுத்தப்படுகிறது.

மேற்குறிப்பிட்ட சம்பவத்தில் தொடர்புபட்ட நபர்களின் வரலாற்று ரீதியான இனவாத தலையீடுகளையும் இந்த சம்பவங்கள் தொடர்பான செயற்பாடுகளையும் நாம் அரசியல்ரீதியாக தெளிவாக நிராகரிக்கின்றோம் என்பதை இங்கு மேலும் வலியுறுத்துகிறோம்.

ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் இனவாதத்தைத் தூண்டும் முயற்சி தோற்கடிக்கப்படவேண்டும். ஆனால் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை படிப்படியாக அமுல்படுத்துவதன் ஊடாக அதை சமூகத்தில் சாதாரண விடயமாக மாற்றுவது முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாதது. மாறாக தற்போதைய ஆளும்தரப்பு இரத்தத்தாலும் இரும்பினாலும் நசுக்கப்பட்ட வரலாற்று அனுபவத்தை நினைவுகூர்ந்து நாடாளுமன்றத்தின் அதிகாரத்தைப் பயன்படுத்தி இச்சட்டத்தை விரைவில் நீக்கவேண்டும்.

மேலும் அதற்குப் பதிலாக வேறொரு பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தைக் கொண்டு வரக்கூடாது என்பது கொள்கையாக இருக்க வேண்டும். இனவாதத்தை முறியடித்து அதற்கு அடிப்படையாக இருக்கும் அரச அடக்குமுறையையும் தோற்கடிக்க வேண்டிய இரட்டைப் பொறுப்பு மக்களுக்கு உள்ளது என்பதை எமது சமூகத்திடம் வலியுறுத்துகிறோம் - என்றுள்ளது.

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரஷாந்த லால் டி அல்விஸ் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சர்வதேச உறவுகளில் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் 1987 கைச்சாத்திடப்பட்ட இந்திய - இலங்கை ஒப்பந்தமானது, இந்தியாவினால் வற்புறுத்தப்பட்டு, இலங்கை மீது திணிக்கப்பட்டது. அதனூடாகக் கொண்டுவரப்பட்ட அரசமைப்பின் 13ஆவது திருத்தமும் முறையற்ற விதத்தில் கொண்டுவரப்பட்டது.

மாகாணசபை முறைமையினால் ஒவ்வொரு மாகாணத்திலும் மாறுபட்ட சட்டவிதிகள் நடைமுறையில் உள்ளன. இவ்வாறானதொரு கட்டமைப்பு இந்தியா போன்ற பரந்துபட்ட நாட்டுக்குப் பொருத்தமானதாக இருப்பினும், இலங்கைக்குப் பொருந்தக்கூடியதல்ல.

அதுமட்டுமல்லாமல் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படவேண்டிய சட்டங்கள் பிறிதொரு நாட்டினால் தீர்மானிக்கப்படுவது ஏற்புடையதல்ல.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையை ஓர் சட்டக்கட்டமைப்பென நான் ஒருபோதும் கூறப்போவதில்லை. அங்கு அரசியலை மையப்படுத்தியே தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

குறிப்பாக ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பாகத் தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டபோது மத்திய கிழக்கு நாடுகள் அதனை எதிர்த்து, இலங்கை ஆதரவாக செயற்பட்டன, இருப்பினும் இலங்கையில் கட்டாய உடற்தகனம் மேற்கொள்ளப்பட்டதை அடுத்து அந்த மத்திய கிழக்கு நாடுகள் அனைத்தும் இலங்கைக்கு எதிராகத் திரும்பின என்பது கவனிக்கப்படவேண்டும்.

அதேபோன்று 'இலங்கையில் இனப்படுகொலை இடம்பெற்றதாக கனடாவின் ஒன்ராரியோவில் பரப்புரை செய்கிறார்கள். ஆனால் யாழ்ப்பாணத்தில் தீவிர சாதிய வேற்றுமைகள் நிலவுகின்றன. அதன் காரணமாக அவர்கள் குருதிக்கொடை கூடச் செய்யமாட்டார்கள்.

அவ்வேளையில் அவசியமேற்பட்டபோது படையினர்தான் குருதிக்கொடை வழங்கினர். இது குறித்தோ அல்லது சிவனொளிபாதமலை சகல மதங்களைச் சேர்ந்தோராலும் புனிதத் தலமாகக் கருதப்படுவது பற்றியோ, இலங்கை குறித்த இன்னபிற சாதகமான விடயங்கள் பற்றியோ ஏன் எவரும் பேசுவதில்லை?

இன்றளவிலே நாட்டுமக்கள் அனைவரும் ஒன்றிணைந்திருப்பதாகவும், சகலரும் ஒரு தலைவருக்குவாக்களித்திருக்கிறார்கள். எனவே இவ்வேளையில் ஓர் உள்ளகப் பொறிமுறையாக உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை உருவாக்கவேண்டும் - என்றார்.

## சிறீதரன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழர் தரப்பில் முன்வைக்கப்படவேண்டிய ஆவணம் குறித்து இருவரும் கலந்துரையாடினர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

தமிழ் மக்கள் பேரவையினால் தயாரிக்கப்பட்ட தீர்வுத்திட்ட முன்மொழிவை அடிப்படையாகக்கொண்டு ஏனைய தமிழ்த்தேசிய கட்சிகளுடன் பேச்சு நடத்துவதற்குத் தாம் தயாராக இருப்பதாக அண்மையில் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்திருந்தார்.

அதேவேளை இதுபற்றிக் கருத்து வெளியிட்டிருந்த இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் இத்தீர்வுத்திட்ட முன்மொழிவு குறித்தும், அதற்கு அப்பாலும் சென்று பேச்சு நடத்துவதற்குத் தாம் தயாராக இருக்கின்றனர் என்று தெரிவித்திருந்தனர்.

இந்தப் பின்னணியிலேயே நாடாளுமன்ற உறுப்பினர்களான சிறீதரனுக்கும் கஜேந்திரகுமாருக்கும் இடையிலான சந்திப்பு ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணியளவில் சிறிதரனின் இல்லத்தில் நடைபெற்றது. இந்தச் சந்திப்பு சிநேகபூர்வமானது என்று சிறீதரன் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

புதிய அரசமைப்பில் சமஷ்டியின் இடத்தை உறுதிப்படுத்துவது குறித்து இருவரும் கலந்துரையாடினர். தமது சார்பில் புதிய அரசமைப்புக்கான யோசனைகளில் உள்ளடக்குவதற்கான முன்மொழிவாக தமிழ் மக்கள் பேரவையின் அரசமைப்பு வரைவை கஜேந்திரகுமார் சிறீதரனிடம் கையளித்தார். அதுபோன்று ரணில் காலத்தில் புதிய அரசமைப்பு வரைவு முயற்சிகளின்போது ரொமேஷ் டி சில்வா தலைமையிலான குழுவிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வைத்த யோசனைகள் பற்றி இதன்போது சிறிதரன் எடுத்துரைத்தார்.

அத்தோடு, தமிழர்களுக்கான தீர்வு விடயத்தை ஒரு பொதுவேலைத்திட்டத்தின் ஊடாக அணுகவேண்டும் என்ற கொள்கை ரீதியான நிலைப்பாடு தொடர்பில் இங்கு இருதரப்பினரும் தமது இணக்கத்தை வெளிப்படுத்தினர்.

## ரில்வினின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரங்கள் கொண்ட முறைமை ஏற்படுத்தப்படவேண்டும் என்பதே ஜேவிபி செயலாளர் ரில்வின் சில்வா கூறியது. அதனைச் சரியாகப் புரிந்துகொள்ளவேண்டும் என்று பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திரா தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட பேரிடர் முகாமைத்து குழு கூட்டம் நேற்று இடம்பெற்றது. அதில் கலந்துகொண்ட பிரதி அமைச்சர் அதன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசும்போது இதனைத் தெரிவித்தார். அவர் இது குறித்து மேலும் தெரிவித்ததாவது:

1978 அரசமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள 13ஆவது திருத்தம் தொடர்பாக ரில்வின் சில்லா தெரிவித்த கருத்தைத் தெளிவாகப் புரிந்துகொள்ளவேண்டும். மாகாணமுறைமையை நீக்குவதற்கான எந்த மக்கள் ஆணையைப் பெறவில்லை. ஆனாலும் தற்போதுள்ள அரசமைப்பை மாற்ற வேண்டிய தேவை இருக்கின்றது. தற்போதைய மாகாணசபை அலகு போதியதல்ல என்பதால் ஒரு தீர்வை நோக்கிப் போகவேண்டியிருக்கிறது என்பதைத்தான் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

அது மாத்திரமல்ல புதிய அரசமைப்பை முன்வைக்கும் போது 13 மட்டும் அல்ல முதலாவது திருத்தம் தொடக்கம் 20 வரையிலான சீர்திருத்தம் வரை மாற்றப்படும். ஆகவே, ரில்வின் கூறியது பிழையாகப் புரிந்துகொள்ளப்பட்டுள்ளது. எந்தொரு வகையிலும் தேசிய மக்கள் சக்தியால் மாகாணசபை முறைமையை நீக்குவதற்கான மக்கள் ஆணையைப் பெறப்படவில்லை. அதற்கான முயற்சியிலும் ஈடுபடவில்லை.

ஆனால் மாகாண சபையையும் விட அதிகாரம்மிக்க ஒரு சபையை வலியுறுத்தி, அனைத்துமக்களுக்கும் சமனான அந்தஸ்தை ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசமைப்பு தேவை. அதில் மாகாணசபை இருக்கா இல்லையா என்ற விடயம் வேறு. ஆனால் இதுவரையும் மாகாணசபையை நீக்குவதற்கான எந்தவிதமான முன்மொழிவுகளும் முன்வைக்கப்படவில்லை என்றார்.

இதில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்களான சுதர்ஷனி ஸ்ரீகாந்த், நவரூபரஞ்சனி முகுந்தன் (காணி), மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் ஏ.எஸ்.எம்.சியாத், மத்திய மற்றும் மாகாண நீர்ப்பாசன திணைக்கள அதிகாரிகள், உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்கள், ஆணையாளர்கள், மாவட்ட செயலக அதிகாரிகள், பிராந்திய சுகாதார சேவைகள் அதிகாரிகள், கல்வி திணைக்கள அதிகாரிகள், மீன் பிடி, விவசாய திணைக்கள அதிகாரிகள், வீதி அபிவிருத்தி திணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் துறைசார் திணைக்களங்களின் அதிகாரிகள்; கலந்துகொண்டனர்.

## 13ஐ முழுமையாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ளக்கூடியதாகவும் அமையவேண்டும் என்று தமிழ் அரசுக் கட்சியின் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வைத்தியர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

வவுனியாவில் மக்கள் சந்திப்பென்றில் நேற்றுக் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த அவர் இதுதொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் ஊடாகக்கொண்டுவரப்பட்டதே 13ஆவது அரசமைப்புத் திருத்தம். அரசமைப்பில் இருப்பதை நடைமுறைப்படுத்த வேண்டிய பொறுப்பு ஆளும்தரப்பைச் சார்ந்ததாகும்.

13ஆ-வது திருத்தச் சட்டம் தமிழர்களான எமக்கு ஒருதீர்வாக இல்லாவிட்டாலும் இரண்டு நாடுகள் முன்நின்று செயல்படுத்தியது என்கின்ற ஒரே காரணத்தினால் அது இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

அந்த வகையிலேயே அநுராகுமார திசாநாயக்கவினுடைய தேர்தல் அறிக்கையிலும் 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவோம் என்று கூறி இருக்கின்றார். அது மாத்திரமின்றி தமிழ் மக்களுக்கான நிரந்தரத் தீர்வைத் தங்களுடைய ஆளும்தரப்பு அரசியல் மாற்றத்தின் ஊடாகக் கொண்டுவரும் என்றும் கூறி இருக்கின்றார்.

எமது கட்சியினுடைய நிலைப்பாடு ஒன்றிணைந்த நாட்டிற்குள் உள்ளக சுயநிர்ணய அடிப்படையில் தமிழ் மக்கள் தங்களை தாங்களே ஆளக்கூடிய ஒரு அரசமைப்பு உருவாக்கப்படவேண்டும் என்பதேயாகும். இதுவே தமிழ் மக்களின் ஏகோபித்த விருப்பமும். ஆகவே இந்த ஆளும்தரப்பு கடந்தகால ஆளும்தரப்புக்களைப் போல் தேர்தல் வாக்குறுதிகளை மீறிச் செயல்படுமாக இருந்தால் அவர்களுக்கு வாக்களித்த தமிழர்கள்கூட அவர்களுக்கு எதிராக திரும்புவதற்கான வாய்ப்புகள் ஏற்படும்.

ஆகவே அநுர ஆட்சி 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தவேண்டும். அதேபோல் தமிழர்களுக்கு நிரந்தர தீர்வை புதிய அரசமைப்பின் ஊடாக உறுதிப்படுத்தவேண்டும்.

அதற்கு அப்பால் அந்த உரிய தீர்வானது அனைத்து இன மக்களும் ஏற்றுக் கொள்ளக்கூடியதாகவும் அமையவேண்டும். தமிழர்களுக்கான அந்தத் தீர்வு ஒன்றிணைந்த இலங்கைக்குள் சுயநிர்ணய அடிப்படையிலானதாக இருக்கவேண்டும். தமிழர்கள் தம்மைத் தாமே ஆளக்கூடிய வகையிலானதாக அமைய வேண்டும்.

ரில்வின் சில்வா ஆளும்தரப்பில் எந்தப் பதவியிலும் இல்லாத ஒருவர். அவர் ஜேவி பின் செயலாளர் மாத்திரமே. எனவே அவரின் கருத்தே அளும்தரப்பின் கருத்தா என்பதைத் தெளிவுபடுத்தவேண்டும். என்னைப் பொறுத்தவரை ரில்வின் சில்வாவினுடைய கருத்தாக இருக்கும் என்று நான் கருதவில்லை - என்றார்.

## வேட்புமனுக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேட்புமனுக்களை இரத்துச் செய்து புதிதாக வேட்புமனுக்களை கோருமாறு பல்வேறு அரசியல் கட்சிகள் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றன.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்காக வேட்புமனுக்களை தாக்கல் செய்தவர்களில் பலர் தற்போது உயிருடன் இல்லை. ஒருசிலர் நாட்டை விட்டு வெளியேறியுள்ளார்கள். உள்ளூராட்சி மன்றங்களுக்காகப் போட்டியிடுவதற்காக ஓ-ரு கட்சியில் பெயர் குறிப்பிடப்பட்டிருந்த பலர் கட்சி தாவியுள்ளார்கள் அல்லது விலகியுள்ளார்கள். ஆகவே ஏற்றுக் கொள்ளப்பட்ட வேட்புமனுக்களுக்கமைய தேர்தலை நடத்துவது பிரச்சினைக்குரியதாக அமையும் என பெப்ரல் உட்பட தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்களும் சுட்டிக்காட்டியுள்ளன. புதிய வேட்புமனுக்களை கோருமாறும் வலியுறுத்தியுள்ளன.

ஏற்றுக்கொள்ளப்பட்ட வேட்புமனுக்கள் தொடர்பில் நாடாளுமன்றத்தின் ஊடாக உறுதியான தீர்மானம் எடுக்கவேண்டும். நாடாளுமன்றத்தின் ஊடாக எடுக்கப்படும் தீர்மானத்துக்கு அமைய செயற்பட தயார் என தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

இன்றைய கூட்டத்தில் இவை தொடர்பாகவே ஆராயப்படவுள்ளன. வேட்புமனுக்களை இரத்து செய்து புதிதாக வேட்புமனுக்களை கோருவதற்கான சாத்தியம் அதிகளவில் காணப்படுகிறது. சித்திரைப் புத்தாண்டுக்கு முன்னர் உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்துவதற்கு ஆளும்தரப்பு எதிர்பார்த்துள்ளது.

**காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு**

**076 3983858**

**மின்னஞ்சல் முகவரி:**
kalaikkathirnews@gmail.com



காலைக்கதிர்
Kalaikkathir

# அனுமதிப்பத்திரமின்றி கால்நடைகளை ஏற்றிச்சென்ற நான்கு பேர் கைதாகினர்

கிளிநொச்சி மாவட்டத்தின் புளியம்பொக்கனை பகுதியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி கொண்டு செல்ல முற்பட்ட பன்னிரண்டு சிறிய கண்டுகளை லொறி மற்றும் உளவு இயந்திரம் மூலம் கொண்டு செல்ல முற்பட்ட நான்கு பேர் தருமபுர பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கால்நடை உரிமையாளரின் விற்பனை செய்வதற்கான கடிதம் கால்நடை கொண்டு செல்வதற்காக கால்நடை வைத்தியரின் சிபாரிசு கடிதம் மற்றும் கால்நடைகளை கொண்டு செல்வதற்கான வாகனத்தில் தண்ணீர் உணவு என்பனவற்றை ஏற்படுத்திக் கொடுக்காமல் கொண்டு செல்லப்பட்ட குற்றச்சாட்டில் நான்கு சந்தேக நபர்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர் நால்வரும் நேற்று கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர் என தர்மபுர பொலீஸ் நிலைய பொறுப்பு டி எம் சதுரங்க தெரிவித்துள்ளார். (113)





## ஐஸ் போதைப்பொருளுடன் சனியன்று இளைஞர் கைது

(பாறுக் ஷிஹான்)

ஐஸ் போதைப்பொருளுடன் இளைஞன் கைது செய்யப்பட்டு மேலதிக விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றார்.

கடந்த சனிக்கிழமை இரவு 9.00 மணியளவில் அம்பாறை மாவட்டம் கல்முனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாண்டிருப்பு பகுதியில்கல்முனைவிசேடஅதிரடிப்படையினர் குறித்த இளைஞனை கைது செய்திருந்தனர்.

கல்முனை விசேட அதிரடிப்படை அதிகாரிகளுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் போதே சந்தேகத்திற்கிடமாக நடமாடிய சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

குருநாகல் பொல்காவலை பகுதியைச் சேர்ந்த 32 வயதுடைய நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது, கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் இருந்து 5 கிராம் 340 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. இதனையடுத்துஇ சந்தேக நபரை கல்முனை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இதுதொடர்பானமேலதிகவிசாரணைகளை கல்முனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும், இந்த கைது நடவடிக்கையானது கல்முனை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஆர்.ஏ.டி.சி.எஸ்.ரத்நாயக்கவின் பணிப்புரைக்கமைய முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.12.2024இல் வெளியிடப்பெற்றது